# கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 சனவரியில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2026 சனவரியில் 56.1 சுட்டெண் பெறுமதியொன்றைப் பதிவுசெய்தது.** தயாரிப்பு நடவடிக்கைகளில் 2025 திசெம்பரில் காணப்பட்ட பருவகால ரீதியிலான உச்சத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதமொன்றில் மாதத்திற்கு மாத விரிவாக்கமொன்றை இது பிரதிபலிக்கின்றது. மாதகாலப்பகுதியில் அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் காணப்பட்டன.

புதிய கட்டளைகளும் உற்பத்தியும் சனவரியில் விரிவடைந்திருந்தன. மேலும், தொழில்நிலையும் விரிவடைந்து காணப்பட்ட அதேவேளை பிரதானமாக சீனப் புத்தாண்டு விடுமுறைகளுக்கு முன்னதாக கையிருப்புக்களை திரட்டுதல் காரணமாக, கொள்வனவுகளின் இருப்பு மாதத்திற்கு மாத அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் மேலும் விரிவடைந்திருந்தது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***


| மாறி | 2025 திசெ. | 2026 சன. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **60.9** | **56.1** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 63.8 | 58.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 61.2 | 57.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 58.5 | 51.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 53.7 | 56.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 62.5 | 55.0 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்படுத்தல்களை எடுத்துக்காட்டுகின்றன.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 சனவரி**
**56.1**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 பெப்புருவரி 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 சனவரியில் 64.5 சுட்டெண் பெறுமதியொன்றைப் பதிவுசெய்து, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டியது.**

பெரும்பாலான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்களினால் வியாபார நடவடிக்கைகளின் விரிவாக்கம் தூண்டப்பட்டது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடம் மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் என்பவற்றின் வலுவான செயலாற்றத்தினால் இவ்வளர்ச்சி தூண்டப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, அதிகரித்த கடன்வழங்கல் நடவடிக்கையினால் தூண்டப்பட்டு, நிதியியல் பணிகளுடன் தொடர்புடைய வியாபார நடவடிக்கைகளும் தொடர்ந்து மேம்பட்டன.

நிதியியல் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியினாலும் அதேபோன்று களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக கல்வி அத்துடன் பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து போன்ற துறைகளின் மேம்பட்ட நடவடிக்கையினாலும் துணையளிக்கப்பட்டு, 2026 சனவரியில் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன.

அதிகரித்த கேள்வியை நிறைவேற்றுவதற்கு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்படை விரிவாக்கத்தைப் பிரதிபலித்து, 2026 சனவரியில் தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. அதேவேளை, முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பின் பின்னர், நிலுவையிலுள்ள பணிகள் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன.

**கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு**


| மாறி | 2025 திசெ. | 2026 சன. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **67.9** | **64.5** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 64.6 | 60.8 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.6 | 59.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 53.8 | 48.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப்பொருளாதார நிலைமைகளினதும் எதிர்பார்க்கப்படும் பருவகால கேள்வியினாலும் வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளின் பின்னர் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்புதல் போன்றவற்றினால் துணையளிக்கப்பட்டு, அடுத்த காலாண்டுக்கான வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் மேலும் மேம்பட்டன.

**கொ.மு.சு**
**பணிகள்**
வியாபார நடவடிக்கைச் சுட்டெண்
2026 சனவரி
**64.5**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 பெப்புருவரி 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் விநியோக நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.